இயற்கை வழிகாட்டியாளர்களுக்கான கையேடு

பாயல் மேத்தா
ஹர்ஷா ஜெயராமையா



தமிழில்: ப. ஜெகநாதன்

இயற்கை வழிகாட்டியாளர்களுக்கான கையேடு

பாயல் மேத்தா

ஹர்ஷா ஜெயராமையா

தமிழில்: ப. ஜெகநாதன்



இயற்கை வழிகாட்டியாளர்களுக்கான கையேடு
- பாயல் மேத்தா, ஹர்ஷா ஜெயராமையா. தமிழில்: ப. ஜெகநாதன்
ஓவியங்கள்: மானசா முராரி
நூல் வடிவமைப்பு: ஜானவி ராஜன்
படவுருக்கள் (Icons): iconicbestiary/Freepik

© 2026 Nature Conservation Foundation, Mysuru.

ISBN: 978-81-954663-5-1

CC BY 4.0
The text of this 'Handbook for Nature Guides' is licensed under a Creative Commons Attribution 4.0 International (CC BY 4.0) license. The full text of this license is available at: creativecommons.org/licenses/by/4.0/ Copyright of the illustrations rests with NCF.

Recommended Citation: பாயல் மேத்தா, ஹர்ஷா ஜெயராமையா. தமிழில் ப. ஜெகநாதன். 2026. இயற்கை வழிகாட்டியாளர்களுக்கான கையேடு. இயற்கைப் பாதுகாப்பு நிறுவனம். மைசூரு. [Payal Mehta and Harsha Jayaramaiah. In Tamil by P. Jeganathan 2026. Handbook for Nature Guides. Nature Conservation Foundation, Mysuru.]

This manual has been printed on recycled paper.

நிதியுதவி:

ROHINI NILEKANI philanthropies

Chola Enter a better life

Rainmatter Foundation

உள்ளடக்கம்

ஆசிரியர்கள் உரை I

இயற்கை வழிகாட்டுதலைப் புரிந்துகொள்ளுதல் 1

இயற்கையைக் கற்றல் 14

விருந்தினரை அறிந்துகொள்ளுதல் 20

இயற்கை வழிகாட்டியாளர்களின் முக்கிய பொறுப்புகள் 23

ஒரு நல்ல இயற்கை வழிகாட்டியாளராக இருப்பது எப்படி? 27

இயற்கை நடைக்குச் செல்லும் முன் செய்ய வேண்டியவை 34

இயற்கை வழிகாட்டுதல் - ஓர் அறிமுகம் 37

இயற்கை வழிகாட்டியாளர்களுக்கும், சூழல்சார் சுற்றுலாவுக்குமான நன்னெறிகள் 56

நன்றி 71

இயற்கை நடை செல்வதற்குத் தேவையானவை 72

ஆசிரியர்கள் உரை



இந்த பூமியில் உள்ள ஒவ்வொரு உயிரினமும் ஏதோ ஒரு வகையில் இயற்கையைப் புரிந்துகொண்டுதான் உள்ளன. எடுத்துக்காட்டாக இரவின் வானத்தில் உள்ள நட்சத்திரங்களைப் பார்த்து சில பறவைகள் வலசை போகின்றன. பூமியின் காந்தப்புலத்தை அறிந்துகொண்டு ஆமைகள் இடம்பெயர்கின்றன. மனிதர்களாகிய நாமும் இயற்கையோடு இயைந்துதான் இருக்கிறோம். ஆனால், அண்மைக் காலங்களில் மனித குலம் இயற்கையோடு இசைந்த வாழ்வை விட்டு அந்நியப்பட்டுவருகிறது. இயற்கை வழிகாட்டியாளர்கள் மனிதர்களுக்கு இயற்கையின் விந்தைகளை எடுத்துச் சொல்லி இயற்கையுடனான பிணைப்பை ஏற்படுத்த உதவுவார்கள்.

இயற்கை வழிகாட்டியாளர்கள் சூழல்சார் சுற்றுலாவின் ஒரு முக்கிய அங்கம். ஆனால், இந்தியாவில் இந்தத் துறையும், பணியும் இன்னும் அவ்வளவாக அறியப்படவில்லை. குழந்தைகளும், மாணவர்களும் அவர்கள் வாழ்வில் ஏதோ ஒரு கட்டத்தில் காட்டுயிர் சார்ந்த துறையில் சேர்ந்து ஏதாவது செய்ய வேண்டும் எனும் ஆர்வத்தைக் கொண்டிருப்பார்கள். ஆனால், தொடக்கத்திலிருந்தே இயற்கை வழிகாட்டியாளர்களாக ஆக வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் மிகவும் அரிதே.

நாங்களும் அப்படித்தான். ஆனால், இயற்கையின் மீது எங்களுக்கு இருந்த ஆர்வத்தினால் தொழில்முறை இயற்கை வழிகாட்டியாளர்களாக ஆனோம். இன்றுவரை இப்பணியை மனநிறைவுடன் செய்துவருகிறோம்.

இயற்கையை நோக்குவதிலும், காட்டுயிர்களைப் பார்த்து ரசிப்பதிலும் எங்களுக்கு ஏற்பட்ட ஈடுபாடு வெவ்வேறு காலகட்டங்களில்தான் தொடங்கியது. நல்வாய்ப்பாக தாஜ் சஃபாரியில் (தாஜிலும் மற்ற இடங்களிலும், தென்னாப்பிரிக்காவிலும்) எங்களுக்கு இயற்கை வழிகாட்டியாளர்களுக்கான சிறந்த பயிற்சியை அளித்தனர். எங்களது பயிற்சியாளர்களான கிரஹாம் வெர்சுயில், சரத் C R மற்றும் எங்கள் சகபணியாளர்களிடமிருந்து இயற்கை வரலாறு, ஒரு சிறந்த வழிகாட்டியாளர்களாக இருப்பது எப்படி என்பதையெல்லாம் புரிந்துகொண்டோம்.

இயற்கைப் பாதுகாப்பு நிறுவனம், கர்நாடகாவில் உள்ள பிலிகிரி ரங்கன் புலிகள் காப்பகத்தின் அருகிலுள்ள கோருகானா (GORUKANA), இராஜஸ்தானில் உள்ள ராவ் ஜோதா பூங்காவின் (RAO JODHA PARK) பிரதீப் கிஷன் ஆகியோர் அளித்த வாய்ப்புகளின் மூலமாகவே நாங்கள் இயற்கை வழிகாட்டியாளர்களாக மற்றவர்களுக்குப் பயிற்சி அளிக்கத் தொடங்கினோம். இந்தியாவின் பல இடங்களில் நடந்த இந்தப் பட்டறைகள் எங்களுக்குப் பல அனுபவங்களைக் கற்றுத் தந்தது. இந்தப் பயிற்சிப் பட்டறைகளை, 'இயற்கை வழிகாட்டியாளர்கள் பயிலும் நிகழ்ச்சி' என்று அழைத்தோம்.


இயற்கையின் விந்தைகளை நாம் வாழ்நாள் முழுவதும் தேடித் தேடி புரிந்துகொண்டே இருக்கலாம். இத்துறையில் யாரும் குறுகிய காலத்தில் நிபுணராகிவிட முடியாது. ஆனால், நல்ல வழிகாட்டும் திறன்களை நிறையக் கற்றுத் தர முடியும். இந்த நுணுக்கங்கள் சூழல்சார் சுற்றுலாவினரின் அனுபவங்களை வெகுவாக மேம்படுத்தும்.

இயற்கை வரலாறு குறித்த அறிவும், வழிகாட்டும் நுணுக்கங்களும் ஆகிய இரண்டையும் தவிர, இந்தக் காலகட்டத்தில் இயற்கை வழிகாட்டியாளர்களும் இயற்கை ஆர்வலர்களும் அறிந்துகொள்ள வேண்டிய முக்கியமான ஒன்று ஒழுக்கநெறி. சூழல்சார் சுற்றுலாவினரை வழிநடத்துவதற்கான அடிப்படை முறைகள் குறித்தும், சுற்றுலாவில் பின்பற்ற வேண்டிய ஒழுக்கநெறி குறித்தும் இந்த நூலில் தந்துள்ளோம். இதனை பொறுப்பான இயற்கை வழிகாட்டியாளர் அனைவருக்கும் இன்றியமையாத ஒன்றாகக் கருதுகிறோம்.

இயற்கை வழிகாட்டியாளர்களாகவும் பயிற்சியாளர்களாகவும் இருந்ததால், உலகின் பலவிதமான இயற்கை வாழிடங்களுக்குச் செல்லவும், பல சுவாரசியமான மனிதர்களைச் சந்திக்கவும், வருமானம் ஈட்டவும் எங்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. எங்களது திறமைகளையும், இயற்கையின் மீதான ஆர்வத்தையும் மேலும் வளப்படுத்திக்கொள்ள இந்தத் தொழில் உதவுகிறது.
இன்னும் பலர் இயற்கை வழிகாட்டியாளர்களாக உருவாக இந்த நூல் உதவும் என நம்புகிறோம்.

பாயல் & ஹர்ஷா

இயற்கை வழிகாட்டுதலைப் புரிந்துகொள்ளுதல்



இயற்கை வழிகாட்டுதல் என்பது சூழல்சார் சுற்றுலாவின் ஒரு பகுதியாகும். எனவே, வழிகாட்டுதலை அறிவதற்கு முன் சுற்றுலாவைப் பற்றிப் புரிந்துகொள்வோம்.

சுற்றுலா என்றால் என்ன?

இன்பத்திற்காகவோ அல்லது பணி நிமித்தமாகவோ மேற்கொள்ளும் பயணத்தை சுற்றுலா எனலாம். பயணங்களையும், இடங்களையும், அது சார்ந்த அனுபவங்களையும் வணிகமாக்குவதை உள்ளடக்கியது சுற்றுலா. பயணங்கள், தங்குமிடங்கள் அது சார்ந்த செயல்பாடுகளை ஒருங்கமைக்கும் சந்தையைச் சார்ந்ததே சுற்றுலா.

சுற்றுலாப் பயணிகள் யார்?

பொழுதுபோக்கிற்காகப் பயணிப்பவர்களை சுற்றுலாப் பயணிகள் எனலாம். மருத்துவச் சிகிச்சைக்காகவோ, வணிகம் போன்ற பிற காரணங்களுக்காகவோ பயணிப்பவர்களும் சுற்றுலாப் பயணிகளே.

சுற்றுலா செல்வதற்குப் பல்வேறு ஆர்வங்கள் காரணமாக இருக்கலாம். எடுத்துக்காட்டாக:

- வரலாற்றை அறிய
- புதிய இடத்தில் மக்களின் கலாச்சாரம், உணவுமுறையை அறிய
- கலை, கட்டடக்கலை ஆகியவற்றைக் கண்டு களிக்க
- இயற்கையான நிலவமைப்பைக் காண
- ஓய்வுக்காக, அமைதியான சூழலை அனுபவிக்க
- புனித யாத்திரைக்காக ஆன்மிகம் சார்ந்த
- யோகா, ஆரோக்கியம் சார்ந்த
- காட்டுயிர்கள், இயற்கையான வாழிடங்களைக் காண
- விளையாட்டு நிகழ்ச்சிகளைக் காண, சாகச விளையாட்டுகளில் பங்குபெற
- கடைகளில் பொருட்களை வாங்க!

மேலே உள்ளவற்றில் எல்லாம் கலந்தும் இருக்கலாம்.



சூழல்சார் சுற்றுலாவில், காட்டுயிர்கள், இயற்கையான வாழிடங்களைக் காணும் ஆர்வமுள்ள பல வகையான சுற்றுலாப் பயணிகள் இருக்கலாம், அவர்கள் விரும்பித் தேடி வருவது:

- அமைதியான, பசுமையான நிலப்பரப்பைக் காண
- புலி, சிங்கம், பனிச்சிறுத்தை போன்ற பெரும் பூனை வகைகளையும், யானை, காண்டாமிருகம், காட்டெருது, மான் முதலான பெரிய பாலூட்டிகளைக் காணவும்
- மரங்களையும் பூக்களையும் காண
- பறவைகளைக் காண
- வண்ணத்துப்பூச்சிகளைக் காண
- தட்டான்கள், ஊசித்தட்டான்களைக் காண
- கடலுக்கடியில் உள்ள உயிரினங்களைக் காண
- காட்டுயிர் ஒளிப்படங்கள் எடுக்க
- பறவைகளின் குரலொலிகளைப் பதிவு செய்ய

இயற்கை சார்ந்த இன்னும் பல அம்சங்களைக் காண என சொல்லிக் கொண்டே போகலாம்!

இயற்கை வழிகாட்டியாளராக இருப்பவர் ஏன் இதை எல்லாம் தெரிந்துகொள்ள வேண்டும் என்று நீங்கள் நினைக்கலாம். சுற்றுலாவினரின் ஆர்வங்களை அறிந்துகொள்வதன் மூலம் அவர்களுக்குப் பிடித்தவற்றைக் காண்பிக்க முயலலாம். இதன் மூலம் சுற்றுலாவினருக்கு இயற்கை சார்ந்த இனிமையான, மறக்க முடியாத அனுபவங்களை வழிகாட்டியாளர்களால் வழங்க முடியும்.

வழிகாட்டியாளர்களுடன் கூடிய சூழல்சார் சுற்றுலா

சில இயற்கை ஆர்வலர்கள் யாருடைய உதவியும் இல்லாமல் தாங்களாகவே பயணங்களைத் திட்டமிட்டு சுற்றிப் பார்க்க விரும்புவார்கள். சிலர் இயற்கையான வாழிடங்களுக்கு வழிகாட்டியுடனோ அல்லது நிபுணருடனோ பயணிக்க விரும்புவார்கள். இந்தியாவில் தேசியப் பூங்காக்கள், சரணாலயங்கள் போன்ற பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகள் உள்ளன, அங்கு உள்ளூர் இயற்கை வழிகாட்டியாளர்களை உடன் அழைத்துச் செல்வது கட்டாயமாகும்.



வழிகாட்டியாளர்களுடன் செல்லும் சுற்றுலாவின் நன்மைகள் என்ன?

வழிகாட்டியாளர்களுடன் சுற்றுலா செல்வதால் பல நன்மைகள் உண்டு. சுற்றுலாப் பயணிகள் தனியாகச் செல்லும்போது அறிந்துகொள்வதைவிட உள்ளூர் வழிகாட்டியாளருடன் சென்றால் அந்த இடத்தில் உள்ள காட்டுயிர்கள், பாரம்பரியம் பற்றி நிறைய கற்றுக்கொள்ள முடியும். உள்ளூர்ச் சமூகத்திலிருந்து வழிகாட்டியாளர் ஒருவரைப் பணியமர்த்துவதன் மூலம் அந்தப் பகுதியின் பொருளாதாரம் மேம்படவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் ஏதுவாகிறது. வழிகாட்டியாளர்கள் தங்கள் அறிவைப் பகிர்ந்துகொள்வதோடு அந்தச் சமூகத்தில் இயற்கை குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்துகிறார்கள். ஓரிடத்தில் இது போன்ற ஊக்கமுள்ள வழிகாட்டியாளர் இருந்தால் காட்டுயிர்கள், அவற்றின் நடமாட்டத்தையும், வாழிடத்தையும் தொடர்ந்து கண்காணிக்க முடிகிறது. இவ்வாறு ஒரு இடத்தை நன்கு அறிந்த ஒரு வழிகாட்டியாளருடன் செல்வது சுற்றுலாவினர் இயற்கைக்கு எந்தக் கெடுதலும் செய்யாமல் நெறிமுறை தவறாமல் பயணிக்க உதவும்.

யார் இயற்கை வழிகாட்டியாளர்? அவர்களின் பங்கு என்ன?

இந்தக் கேள்விக்கு வெவ்வேறு அமைப்புகளும் மக்களும் வெவ்வேறு முறைகளில் பதிலளிக்கின்றனர். சில வரையறைகளையும் விளக்கங்களையும் பார்ப்போம்:

“ஒரு இடத்தின் இயற்கையான சூழலைப் பற்றி அதாவது அங்குள்ள உயிரினங்கள், தாவரங்கள் ஆகியன பற்றிய தகவலைச் சுற்றுலாவினருக்கு எடுத்துச் சொல்லி, அந்த இடத்திற்கும் சுற்றுலாவினருக்கும் தொடர்பை ஏற்படுத்தும் ஒரு பாலமாக இருப்பவரே இயற்கை வழிகாட்டியாளர். இயற்கை சார்ந்த அறிவியல் பூர்வமான தகவல்களை இயற்கைக்கு எந்தக் கெடுதலும் விளைவிக்காமல் நெறிமுறை தவறாத வகையில் சுவாரசியமாகச் சுற்றுலாவினருக்கு எடுத்துச் சொல்வதே அவர்களின் முக்கிய நோக்கமாகும். கூட வரும் சுற்றுலாவினருக்கு இயற்கை குறித்த புரிதலையும், இயற்கையை சிறந்த முறையில் அனுபவித்து ரசிக்கவும், அவர்களைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்வதையுமே முன்னுரிமையாகக் கொண்டு வழிநடத்திச் செல்ல இயற்கை வழிகாட்டியாளர்களுக்கு முறையான பயிற்சி அவசியம்.

—Bushveld Training Adventures, South Africa

bit.ly/game-ranger-tour-guide-or-nature-guide

இயற்கை வழிகாட்டியாளர்கள் சுற்றுலாத் துறையில், முக்கியமானவர்கள். சுற்றுலா செல்லும் இடத்தைப் பற்றிய சுவாரசியமான தகவல்கள், அந்த இடத்தின் கலாச்சாரம் பற்றிய அவர்களின் அனுபவம் சார்ந்த அறிவு, அதை தெளிவாக விளக்கி எடுத்துச் சொல்லும் விதம் முதலியவற்றால் பொழுதுபோக்குக்காக வரும் சுற்றுலாவினருக்கு அவர்கள் கழிக்கும் நேரத்தை ஒரு சிறந்த

பயனுள்ள அனுபவமாக மாற்ற இயற்கை வழிகாட்டிகளால் முடியும்.

—John A.P. and Kevin K.F. Wong (October 2001). 'Case study on tour guiding: Professionalism, issues and problems'

bit.ly/case-study-on-tour-guiding

கிரேக்க நாட்டில் உள்ள இயற்கை வழிகாட்டியாளர்களுக்குச் சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தையும், இயற்கைக்கு மிகக் குறைந்த அளவிலோ அல்லது முற்றிலும் தீங்கு ஏற்படுத்தாத வாழ்க்கை முறைகளையும், இயற்கையும், கலாச்சாரமும் வளங்குன்றாமல் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் ஆகியவை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இதன் மூலம் அவர்களுடன் வரும் சுற்றுலாவினருக்கும் இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. சுற்றுலாத்தலங்களின் இயற்கை கலாச்சாரம் குறித்த சரியான தகவல்களை அளிப்பதன் மூலமும், சுற்றுலாவினரும், அங்கு வரும்போது அந்த இடத்தை மதித்து நெறிமுறையுடன் நடந்துகொள்ள வைப்பதுமே இதன் நோக்கம். இதனால் சுற்றுலாத்துறை சார்ந்த எதிர்மறையான எண்ணத்தை இது மாற்றும். மேலும், உள்ளூர் மக்களும் இயற்கைச் சுற்றுலா சார்ந்த பணிகளில் பங்கெடுக்க ஊக்குவிக்கப்படுவார்கள்.

—Constantina Skanavis and Christos Giannoulis (January 2010). 'Improving Quality of Ecotourism through Advancing Education and Training for Eco-tourism Guides'

bit.ly/case-study-on-tour-guiding

சூழல்சார் சுற்றுலா உலகம் முழுவதும் அதிகரித்துவருகிறது, குறிப்பாக, வளர்ந்து வரும் நாடுகளில், இது பெரும்பாலும், பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் நடைபெறுகிறது (Weaver, 1998). சுற்றுலாவினரின் பாதுகாப்பை உறுதி செய்தல், உள்ளூர் கலாச்சாரம், நடைமுறைக்கு ஏற்ப அவர்களுக்கு அந்த இடத்தைப் பற்றிய துல்லியமான, சுவாரசியமான தகவல்களை வழங்குதல் ஆகியன இயற்கை வழிகாட்டியாளர்களின் கடமையாகும்.

- Rosemary Black, Sam Ham, and Betty Weily (June 2001). “Ecotour Guide Training in Less Developed Countries: Some Preliminary Research Findings

bit.ly/ecotour-guide-training

பொதுவாக நாம் நினைப்பது போல இயற்கை வழிகாட்டியாளர்களின் பணியானது, அந்த இடத்தைப் பற்றிய சுவாரசியமான தகவல்களைத் தருவதோ, கானுலா அனுபவங்களை வழங்குவதோ, உயிரினங்களைக் கண்டறிந்து அடையாளம் காட்டுவதோ மட்டுமல்ல. அந்தச் சூழலில் என்ன நடக்கிறது, சுற்றுச்சூழலில் இந்த உயிரினங்களின் பங்கு என்ன, அந்த இடத்தில் வாழும் மக்களின் கதை, அங்குள்ள உயிரினங்களின் பாதுகாப்பு நிலை அதற்கான முன்னெடுப்புகள் போன்ற பல தகவல்களை விளக்குவது அவர்களின் பணியாகும். கூட வரும் விருந்தினரின் பாதுகாப்பு, அவர்களின் நலன்களைக் கவனத்தில் கொண்டு

செயல்படும் அதே வேளையில் இது போன்ற தகவல்களையும் அவர்களுக்குச் சொல்ல வேண்டும்.

அவர்கள் மக்களுடன் பழகும் திறன்மிக்கவர்களாகவும், இயற்கை மீது அக்கறை உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். இந்தத் திறமைகள், காட்டுயிர் பற்றிய அறிவு, அக்கறை ஆகியவற்றோடு சேர்ந்து பணிவு, இரக்கம், நகைச்சுவை உணர்வு ஆகிய பண்புகளும் சரியான கலவையுடன் இருந்தால் அவர்கள் சிறந்த இயற்கை வழிகாட்டியாளர்களாக விளங்குகிறார்கள்.

குறிப்பாக இந்தியச் சூழலில், 'இயற்கை வழிகாட்டியாளர்' என்பதன் அர்த்தத்தையும் அவரின் பங்கையும் படிப்படியாக ஆராய்வோம்.

இயற்கை வழிகாட்டியாளர்

காட்டுயிர்கள் மற்றும் இயற்கை சார்ந்த அவதானிப்புகளைச் செய்பவர்களையும், அவற்றைப் பற்றி படிப்பவர்களையும், இயற்கையியலாளர்கள் (Naturalists) என்பர். இவர்கள் சோதனைச் சாலையில் மட்டுமே அமர்ந்து உயிரினங்களைப் பற்றி ஆராயாமல், அவற்றைப் புறவுலகில் இயற்கையான சூழலில் நோக்குவார்கள்.



இந்தியாவைப் பொறுத்தவரை, சுற்றுலாவினரை இயற்கையான வாழிடங்களுக்கு அழைத்துச் சென்று காட்டுயிர்கள் பற்றி விளக்குபவர்களையும் நேச்சுரலிஸ்ட் (Naturalist) என்பர். இவர்களை Nature Guide, Wildlife tour leader, Expedition leader என்றும் கூறுவர்.




தாஜ்மஹால் போன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்கு நாம் சென்றால் அந்த இடங்களைப் பற்றிய சிறப்புகளை எடுத்துச் சொல்ல பல Tourist Guide (டூரிஸ்ட் கைடுகள்) இருப்பதைப் பார்த்திருக்கலாம்.

பல்வேறு இடங்களுக்குப் பேருந்து அல்லது சிறிய வாகனங்களில் நம்மை அழைத்துச் செல்பவர்களை, தங்குவதற்கான வசதிகளை ஏற்பாடு செய்பவர்களை Tourism operator (டூரிசம் ஆபரேட்டர்) என்றெல்லாம் அழைப்போம். ஆனால், இவர்கள் பொதுவாக வெகுஜன மக்கள் செல்லும் இடங்களுக்கு மட்டுமே அழைத்துச் செல்வர்.

இது போலவே இயற்கையான வாழிடங்களுக்கு மட்டுமே அழைத்துச் சென்று அந்த இடங்களின் சிறப்புகளை எடுத்துச் சொல்ல, அங்குள்ள தாவரங்கள், பறவைகள், பாலூட்டிகள் போன்றவற்றை நமக்குக் காண்பித்து, நாம் பார்த்து ரசிக்க, ஒளிப்படம் எடுக்க உதவுபவர்களை இயற்கை வழிகாட்டியாளர்கள் (Nature Guides) எனலாம்.
ஒருசில நாடுகளில் இப்பணியைச் செய்பவர்கள் Ranger, Safari Guide என்றும் அழைக்கப்படுகின்றனர்.

யார் வேண்டுமானாலும் இயற்கை வழிகாட்டியாளராக ஆகலாம். இதற்கு முறையான கல்வித் தகுதி எதுவும் தேவையில்லை. ஆனால், இயற்கையின் மீது ஆர்வமும், அதைப் பற்றிய தகவல்களை அறிந்துகொள்வதில் ஈடுபாடும், சுற்றுலாவினரிடம் அன்புடனும் அணுக்கமாகவும் நடந்துகொள்ளும் பண்பும், ஒழுக்கநெறிகளைக் கடைபிடிக்கும் தன்மையும் இருப்பது அவசியம்.

இயற்கையைக் கற்றல்



இயற்கையான சூழலில் தென்படும் தாவரங்கள், விலங்குகள், பூஞ்சைகள் ஆகிய உயிரினங்களை உற்றுநோக்கி ஆராய்ந்து, அவற்றைப் பற்றி அறிந்துகொள்ளும் துறைக்கு இயற்கை வரலாறு (Natural History) என்று பெயர். இத்துறையில் ஓர் உயிரினத்தை எப்படி அடையாளம் காண்பது, அதன் பண்புகள், வாழ்வியல் நிகழ்வுகள், அந்த உயிரினம் தன்னைச் சுற்றியுள்ள மற்ற உயிரினங்களுடனும், சுற்றுப்புறச் சூழலுடனும் எவ்விதத் தொடர்பில் உள்ளது என்பன பற்றியெல்லாம் அறிந்துகொள்ள வேண்டும்.

இயற்கை வழிகாட்டியாளர்களுக்கு இயற்கை வரலாறு சார்ந்த ஆர்வமும், அறிவும் மிகவும் அவசியம். இயற்கையை உற்றுநோக்கினால் ஒவ்வொரு நாளும் ஏதோ ஒரு புதிய தகவலை நாம் தெரிந்துகொள்ள முடியும். ஆகவே, ஒருவரால் ஒரே நாளிலோ அல்லது குறிப்பிட்ட காலத்திலோ இயற்கையின் விந்தைகளைப் பற்றி அறிந்துகொள்வது என்பது முடியாத காரியம். இயற்கையைக் கற்றல் என்பது ஒரு முடிவில்லாப் பயணம். ஆகவே இயற்கை வழிகாட்டியாளராக ஆக விரும்புவோர் கூடியவரை அவர்கள் இருக்கும் இடத்தில் உள்ள உயிரினங்களைப் பற்றி தொடர்ந்து உற்றுநோக்கி வருவது அவசியம்.

காட்டுயிர்களைப் பற்றி அறிந்துகொள்ள சிறந்த வழி இயற்கையான சூழலில் சுற்றித் திரிந்து அவற்றை உற்றுநோக்குவதில் அதிக நேரம் செலவழிப்பதே ஆகும். நீங்கள் இருக்கும் இடத்திற்கு அருகில் உள்ள காட்டுப்பகுதிகளுக்குச் (தகுந்த முன் அனுமதி பெற்று) சென்று அவதானிக்கலாம். உருவில் பெரிய பாலூட்டிகள், பறவைகள், மரங்கள் மட்டுமல்லாது, சின்னஞ்சிறு பூச்சிகள், சிறிய தாவரங்கள் போன்றவற்றையும் உற்றுநோக்க வேண்டும். காட்டுப்பகுதிகளில் மட்டுமே சென்று உயிரினங்களைப் பார்க்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. வயல்வெளிகள், தோட்டங்கள், அவ்வளவு ஏன் வீட்டில் இருக்கும் காய்கறித் தோட்டத்திலும், பூங்காக்களிலும் பலவிதமான உயிரினங்களை அவதானிக்கலாம்.

இப்படி வெளியில் செல்லும்போது அனுபவமிக்க இயற்கையியலாளர்களுடன் சேர்ந்து செல்வதால் அவர்களிடமிருந்து நிறைய கற்றுக்கொள்ள முடியும். உங்கள் பகுதியில் கானுலா, இயற்கை நடை போன்ற நிகழ்ச்சிகளை நடத்தும் குழுக்கள், அரசு சாரா நிறுவனங்கள் இருக்கின்றனவா என்பதை அறிந்து அங்குள்ள ஒத்த ஆர்வமுள்ளவர்களுடன் கானுலா செல்வதாலும் நாமும் பலவிதமான அனுபவங்களைப் பெற முடியும்.

இயற்கை நடைக்குச் செல்லும்போது நாம் உற்றுநோக்குவதை விவரமாக ஒரு குறிப்பேட்டில் எழுதி வைத்துக்கொள்வது மிகவும் அவசியம். அப்படிச் செல்லும்போது பேனா அல்லது பென்சில், ஒரு சிறிய குறிப்பேடு இரண்டையும் எப்போதும் எடுத்துச் செல்ல வேண்டும்.

களக் குறிப்பேட்டை (Field notebook) தொடர்ந்து எழுதிவருவது ஒரு நல்ல பழக்கம். நாம் பார்ப்பதை சில நாட்களில் மறந்துவிடுவதற்கான வாய்ப்புகள் அதிகம். களக் குறிப்பேட்டில் எவ்வளவு விவரமாக எழுதி வைக்கிறோமோ அவ்வளவு நல்லது. நாம் சென்ற இடத்தின் பெயர், தேதி, நேரம், காலநிலை (வெயில், மழை, மேகமூட்டம் போன்றவை) உடன் வந்தவர்களின் பெயர்கள், அந்த நடையில் நீங்கள் பெற்ற அனுபவங்கள், பார்த்து வியந்தவை, உணர்ந்தவை என அனைத்தையும் எழுதி வைத்துக்கொள்ளலாம். பார்த்த உயிரினங்களின் பட்டியலையும் எழுதிக்கொள்ளலாம். கூடியவரை களத்தில் இருக்கும்போதே இவற்றை எழுதிக்கொள்வது நல்லது. முடியவில்லை என்றால் அதே நாளில் ஓய்வாக இருக்கும்போது மேலும் விவரமாக எழுதிக்கொள்ளலாம். பார்த்ததை ஒரு எளிய கோட்டோவியமாகவும் கூட வரைந்து வைத்துக்கொள்ளலாம்.

எழுதும்போதும், வரையும்போதுதான் களத்தில் நாம் கண்டவற்றையும், கேட்டவற்றையும் எவ்வளவு கவனமாக உற்றுநோக்கியிருக்கிறோம் என்பதை அறிய முடியும். தொழில்நுட்ப

வளர்ச்சியின் காரணமாக, டிஜிட்டல் கேமராக்கள், கைபேசி கேமராக்கள் வந்த பிறகு, குறிப்பெடுக்கும் பழக்கம் வெகுவாகக் குறைந்துவிட்டது. வித்தியாசமாக எதையாவது கண்டால் உடனே அதை போட்டோ எடுப்பதில் மட்டுமே இப்போது பலர் குறியாக இருக்கின்றனர். இவ்வாறு ஆவணப்படுத்துவதற்காக போட்டோ எடுப்பது தவறில்லை. ஆனால், அதை மட்டுமே செய்துவிட்டு நாம் காணும் காட்சியை உற்றுநோக்காமலும் ரசிக்காமலும் அந்த இடத்திலிருந்து நகர்வது சரியல்ல. களத்தில் நேரடியாகப் பார்த்து அறிந்துகொள்வதோடு, இயற்கை வரலாறு குறித்த நூல்களைப் படிப்பது அவசியம். இணையத்தில் ஏராளமான தகவல் வளங்கள் கிடைக்கின்றன. அவற்றையும் பயன்படுத்திப் படிக்க வேண்டும். கீழே சில பயனுள்ள இணையதளங்களும் நூல்களும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

ஆங்கிலத்தில் இணைய வளங்கள்:

wildwanderer.com
lifemeetsthelens.com
ifoundbutterflies.org
flowersofindia.net
jlrexplore.com
indiabiodiversity.org
early-bird.in/webinars
SeasonWatch’s YouTube channel
Kottayam Nature Society’s YouTube channel

இயற்கை வரலாறு குறித்த சில புத்தகங்கள்:

The Weavers — Geetha Iyer
The Songs of Trees — David George Haskell
A Naturalist on the Prowl — EHA
The Wild Heart of India — TR Shankar Raman
Of Birds and Birdsong — M Krishnan
The Fall of a Sparrow — Salim Ali
Jungle Lore — Jim Corbett
A Naturalist's Journal — M Yuvan

தமிழில் இணைய வளங்கள்:

https://uyiri.wordpress.com/
https://tamilbirds.wordpress.com/
https://birdsoframanathapuram.wordpress.com/
https://mohanareuban.blogspot.com/
https://www.writersatheesh.com/2020/

தமிழில் களக் கையேடுகள்:

தமிழ்நாட்டுப் பறவைகள் - க. ரத்னம்
பறவைகள் ஓர் அறிமுகம் - ப. ஜெகநாதன், ஆசை
திருவண்ணாமலை மாவட்டப் பறவைகள் - சிவக்குமார்
வண்ணத்துப்பூச்சிகள் ஓர் அறிமுகம் - ஆர். பானுமதி
தட்டான்கள், ஊசித் தட்டான்கள் - ப. ஜெகநாதன், ஆர். பானுமதி

தமிழில் இயற்கை வரலாறு குறித்த சில புத்தகங்கள்

மழைக் காலமும் குயிலோசையும் - மா. கிருஷ்ணன்
கையிலிருக்கும் பூமி - தியடோர் பாஸ்கரன்
இயற்கை: செய்திகள், சிந்தனைகள் - ச. முகமது அலி
அதோ அந்த பறவை போல - ச. முகமது அலி
தமிழரும் தாவரமும் - கு.வி.கிருஷ்ணமூர்த்தி
மரங்கள்: நினைவிலும் புனைவிலும் - தொகுப்பு மதுமிதா
காவிரிக் கரையில் அப்போது- தங்க. ஜெயராமன்

விருந்தினரை அறிந்துகொள்ளுதல்





நம்முடன் வரும் இயற்கை ஆர்வமிக்க சுற்றுலாவினரை, 'விருந்தினர்கள்' என அழைக்கலாம். இயற்கையைப் பற்றி எந்த அளவுக்கு அறிந்து வைத்திருக்கிறோமோ, அதே அளவுக்கு நாம் அழைத்துச் செல்லும் விருந்தினர்களையும் புரிந்துகொண்டு வழிநடத்துவது அவசியம்.

விருந்தினர் என்பவர் யார்? அவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருப்பார்கள்?

விருந்தினர் என்பவர்:

- உலகின் எந்தப் பகுதியைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம்
- எந்த மொழியை வேண்டுமானாலும் பேசுபவராக இருக்கலாம்
- எந்தக் கலாச்சார பின்னணியிலிருந்தும் வந்தவராக இருக்கலாம்
- எந்த வயதினராகவும் இருக்கலாம்
- எந்தக் கல்வித் தகுதியுள்ளவராகவும் இருக்கலாம்
- எந்த வேலை செய்பவராகவும் இருக்கலாம்
- பல இடங்களுக்குப் பயணம் செய்தவராகவோ அல்லது அதிகம் பயணம் செய்யாதவராகவோ இருக்கலாம்.

விருந்தினர்கள் ஓரிடத்திற்குச் செல்வதற்கான காரணங்கள் என்ன?

இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். அவற்றில் சிலவற்றைக் காணலாம்:


- காட்டுயிர்களைப் பார்த்து ரசிக்க (சில வேளைகளில் குறிப்பிட்ட இடத்தில் காணப்படும் பறவைகள், பாலூட்டிகள் அல்லது மலர்கள் போன்றவற்றைக் காண)
- ஒளிப்படங்கள் எடுக்க
- அன்றாடப் பணிகளிலிருந்து விடுபட்டு, சற்று வித்தியாசமான சாகசப் பணிகளில் ஈடுபட

- சமூக ஊடகங்களில் பார்த்த இடத்தை நேரில் கண்டுகளிக்க
- பிறந்த நாள், திருமண நாள் போன்ற முக்கியமான நாட்களை கொண்டாட
- பள்ளி, அலுவலக விடுமுறையைக் கழிக்க
- நகரவாழ்வின் இரைச்சலை விட்டு விலகி அமைதியாக நேரத்தைக் கழிக்க
- ஆன்மிகக் காரணத்திற்காக
- புதிய இடங்களை, இயற்கை அழகைப் பார்த்து ரசிக்க

என பலவிதமான காரணங்கள் இருக்கலாம்!

நீங்கள் இயற்கை வழிகாட்டியாளராக ஆக விரும்பினால் விருந்தினர்கள் எதற்காக ஓரிடத்திற்கு வந்திருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்வது அவசியம். அவர்களின் ஆர்வம் என்ன (எ.கா. பறவை நோக்கலா? அல்லது ஒளிப்படம் மட்டுமே எடுக்கவா?) என்பதைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப நடந்து கொள்வது நல்லது.

இயற்கை வழிகாட்டியாளர்களின் முக்கிய பொறுப்புகள்



ஒரு நல்ல இயற்கை வழிகாட்டியாளர் இயற்கையின் விந்தைகளைப் பற்றி எடுத்துச் சொல்லும் திறமையால், தன்னுடன் வருபவர்களுக்கு இயற்கையின் மேல் ஆர்வத்தை ஏற்படுத்திவிட முடியும்.

“நமக்கு எது பிடிக்குமோ அதைத்தான் நாம் பாதுகாக்க முயல்வோம், நமக்கு எது நன்றாகப் புரிகிறதோ அதைத்தான் நாம் விரும்புவோம், நமக்கு எது சரியாகச் சொல்லிக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதைத்தான் நாம் தெளிவாகப் புரிந்துகொள்கிறோம்.” - பாபா டியோம்

- **விருந்தினருக்கும் இயற்கைக்கும் தொடர்பை ஏற்படுத்துதல்.**

  இயற்கை வழிகாட்டியாளர் என்பவர் புறவுலகில், இயற்கையான வாழிடங்களில் நடக்கும் நிகழ்வுகளைப் பற்றி விளக்கிச் சொல்பவர்.

ஆனால், அது மட்டும் அவரது பணி அல்ல!

- ***தாம் இருக்கும் இடத்தின், அங்கு நிலவும் கலாசாரத்தின் ஒரு பிரதிநிதியாக அவர் இருக்கிறார்.***

  இயற்கை வழிகாட்டியாளரின் (அவர் ஆணோ, பெண்ணோ) மூலமாகத்தான் புதிதாக ஓர் இடத்திற்கு வரும் விருந்தினருக்கு அப்பகுதியில் நிலவும் கலாச்சாரம், அன்றாட வாழ்க்கை முறை, உள்ளூர் சமூகத்தைப் பற்றிய விவரங்களை அறிந்துகொள்ள முடியும்.

- ***இயற்கை குறித்த தகவல்களின் மூல ஆதாரமாக விளங்குவார்***

  தன்னுடன் வரும் விருந்தினருக்கு ஒரு இடத்தின் நிலவமைப்பு, காட்டுயிர்கள், உள்ளூர் சமூகம், இடத்தின் வரலாறு போன்ற விவரங்களைச் சரியான முறையில் எடுத்துரைப்பது இயற்கை வழிகாட்டியாளரின் முக்கியப் பொறுப்புகளில் ஒன்றாகும். இயற்கை நடை நிகழ்வுகளில் விருந்தினர்கள் இயற்கை வழிகாட்டியாளர்களிடமிருந்து புதிய தகவல்களைத் தொடர்ந்து தெரிந்துகொள்வார்கள். ஆகவே, தாங்கள் செல்லும் இடங்களைப் பற்றிய முழுத் தகவல்களையும், அண்மைய செய்திகளையும் தெரிந்துவைத்திருப்பது இயற்கை வழிகாட்டியாளரின் கடமை ஆகும்.

- ***பொறுப்பாக வழிநடத்திச் செல்பவர்***

  ஒரு இயற்கை வழிகாட்டியாளரே இயற்கை நடை, கானுலா நிகழ்வுகளின் போது சுற்றுலாவினரை

முன்னின்று வழிநடத்திச் செல்ல வேண்டும். ஒரு நிகழ்வு எந்தவிதத் தங்குதடையுமின்றி, நெறிமுறைகளைப் பின்பற்றியும் நடைபெறுவதற்கு அவரே பொறுப்பாவார். அப்படி அவர்கள் செல்லும் வாழிடங்களுக்கும், அங்குள்ள உயிரினங்களுக்கும் எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாமலும், உள்ளூர் மக்களை மதித்து நடப்பதையும், சுற்றுலாவினரின் பாதுகாப்பை உறுதிசெய்வதையும் அவர் பார்த்துக்கொள்ள வேண்டும்.

- ***புதிய இடத்தின் நண்பர்***


  சுற்றுலாவினர் பெரும்பாலும் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு முதன்முறையாக வரும்போது அவர்களுக்கு அப்பகுதியில் தெரிந்த ஒரே நண்பர் கூட வரும் இயற்கை வழிகாட்டியாளர்களே. இந்த உறவு மிக முக்கியமான ஒன்று. சுற்றுலாவினருக்கு அந்தப் பயணத்தில் தேவைப்படுவதைச் செய்துகொடுப்பது, அவர்களுக்கு ஏதாவது தொந்தரவு இருந்தால் அதை கவனிப்பது, அந்த இடம், அங்குள்ள உயிரினங்கள், உள்ளூர் மக்கள் ஆகியவற்றைப் பற்றிய விவரங்களை எடுத்துச் சொல்லும் ஒரு நண்பனாக அவர் இருக்க வேண்டும்.
  இந்தப் பயணத்தில் ஏற்படும் நட்பு எதிர்காலத்திலும் தொடர்வதற்கான வாய்ப்புகள் அதிகம்.

- **இயற்கை வழிகாட்டியாளர்கள் கூட வரும் சுற்றுலாவினருக்கு மட்டுமல்லாமல் உள்ளூர் மக்களுக்கும் இயற்கைப் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவார்**

  ஓர் அனுபவமிக்க இயற்கை வழிகாட்டியாளர், தாம் இருக்கும் இடத்தில் நிலவும் இயற்கைக்கு ஊறுவிளைவிக்கும் காரணிகள் பற்றியும் இயற்கையைப் பாதுகாக்க எடுக்கப்படும் முன்னெடுப்புகள் பற்றியும் தெரிந்துவைத்துக்கொள்வது அவசியம். இந்த அனுபவங்களால் வரும் விருந்தினருக்கு அந்த இடத்தைப் பற்றிய துல்லியமான விவரங்களை அளிக்க முடியும். பல இயற்கை வழிகாட்டியாளர்கள், இயற்கைப் பாதுகாப்பு முன்னெடுப்புகளுக்குப் பங்களித்தும், இயற்கைப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை உள்ளூர் மக்களுக்கு எடுத்துச் சொல்லியும், இயற்கை சார்ந்த மக்கள் அறிவியல் திட்டங்களுக்குப் பங்களிக்கவும் செய்கின்றனர்.



ஒரு நல்ல இயற்கை வழிகாட்டியாளராக இருப்பது எப்படி?



இயற்கை வரலாறு பற்றிய புரிதல் எவ்வளவு முக்கியமோ அது போலவே நாம் அழைத்துச் செல்லும் விருந்தினர்களைப் பற்றி புரிந்துவைத்திருப்பதும், கையாள்வதும் அவசியம்.

ஒரு நல்ல இயற்கை வழிகாட்டியாளர்:

- ***விருந்தினர்களின் தேவையைப் புரிந்துகொள்ளும் திறமையுள்ளவராக இருப்பார்***
  விருந்தினர்கள் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பதையும், அவர்களால் என்ன முடியும் (ability) என்பதையும் அறிந்து வைத்திருக்க வேண்டும். அவர்கள் வெவ்வேறு துறைகளில் இருந்தும், பண்பாட்டில் வேறுபட்டும், இயற்கை சார்ந்த புரிதலில் பல்வேறு நிலைகளிலும் இருக்கலாம். அவர்கள் பறவை நோக்கிலோ, பெரிய பாலூட்டிகளை நோக்குதலிலோ, தாவரங்கள், பூச்சிகள் என பலவற்றில் ஆர்வம் உள்ளவர்களாகவும் இருக்கலாம். சிலர் வெகுதூரமோ வேகமாகவோ நடக்க முடியாதவர்களாக, மலை ஏற முடியாதவர்களாக இருக்கலாம். இதையெல்லாம் அறிந்துகொள்ளுதல் அவசியம். இதன்

மூலமாகவே விருந்தினர்களுக்குத் தகுந்தவாறு ஒரு சில மாற்றங்களைச் செய்து இயற்கை நடையைத் திட்டமிட்டு வழிநடத்திச் செல்ல முடியும்.

- ***இயற்கையை நேசிப்பவராக இருப்பார்***
  இயற்கை வழிகாட்டியாளர் ஆர்வத்துடன் வழிநடத்திச் சென்றால், கூட வருபவர்களையும் அந்த ஆர்வம் தொற்றிக்கொள்ளும். அவர்களும் புறவுலகில் இருப்பனவற்றை விரும்ப ஆரம்பித்துவிடுவார்கள். நாம் கடமைக்கு வழிநடத்திச் சென்றால் இயற்கை வழிகாட்டியாளர்கள் சிறந்த அனுபவத்தை வழங்க முடியாது.

- ***தெரிந்ததை மகிழ்ச்சியுடன் சொல்லிக்கொடுப்பவராக இருப்பார்***
  இயற்கையின் விந்தைகளைப் பற்றி தனக்குத் தெரிந்ததை எல்லாம் சுவாரசியமாக எடுத்துச் சொல்வதால், விருந்தினர்களும் அவற்றைப் பற்றி மேலும் தெரிந்துகொள்ள ஆர்வத்துடன் கேள்விகளைக் கேட்டுத் தெரிந்துகொள்வார்கள்.

- ***நட்புடன் பழகுபவராக இருப்பார்***
  விருந்தினர்கள் அவர்களது விடுமுறையைக் கழிக்க புதிய இடத்திற்கு வந்திருப்பார்கள். அங்கே அவர்களுக்குத் தெரிந்தவர் நீங்கள் ஒருவராகவே மட்டுமே இருக்கக்கூடும். ஆகவே, அவர்களுடன் நட்புடன் பழகுவது அவசியம்.

- ***பணியில் கவனமும், கடமையும் தவறாதவராக இருப்பார்***
நட்பாக நடந்துகொள்வது அவசியம். அதே வேளையில் நாம் செய்யும் பணியில் கவனமும், கடமை தவறாமல் இருப்பதும் அவசியம். வழிகாட்டும் நெறிமுறைகளில் இருந்து ஒருபோதும் தவறாமல் இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக விருந்தினர் கேட்கிறார் என்பதற்காக வழக்கமாக அனுமதிக்கப்பட்ட பாதையிலிருந்து வேறு பாதையில் செல்வதையோ, ஒளிப்படம் எடுக்க உயிரினங்களில் அருகில் செல்வதையோ அனுமதிக்காமல் கண்டிப்புடன் நடந்துகொள்ள வேண்டும்.

- ***விருந்தினர் சொல்வதைச் செவிமடுத்து கேட்பவராக இருப்பார்***
இயற்கை நடையின்போது உள்ள உயிரினங்களைப் பற்றிய தகவல்களை வழிகாட்டியாளர் எடுத்துச் சொல்வது அவசியம். அதே வேளையில் விருந்தினர் சொல்வதையும் செவிமடுத்துக் கேட்க வேண்டும். எடுத்துக்காட்டாக, அவர்களது அனுபவங்களைப் பகிரும்போதும், சந்தேகங்களைக் கேட்கும் போதும், நீங்கள் சொல்வதில் ஏதாவது குறைகள் இருப்பின் அவற்றைச் சொல்லும் போதும் அவர்கள் சொல்வதையும் கேட்க வேண்டும்.

- ***மிகுந்த ஆர்வத்துடனும், சுறுசுறுப்பாகவும் இருப்பார்***
இன்முகத்துடன் ஆர்வத்துடனும், சுறுசுறுப்பாகவும் வழிநடத்திச் சென்றால், விருந்தினர்களும் ஆர்வத்துடன் பங்குகொள்வார்கள்.

- **பொறுமை உள்ளவராக இருப்பார்**
  பொறுமையாக, பதற்றப்படாமல் இருப்பவர்களுடன் கானுலா செல்ல அனைவரும் விரும்புவார்கள். கூட வரும் சுற்றுலாவினர், மலையேற்றம், கரடுமுரடான சாலையில் நடந்து செல்லுதல், போன்ற சற்றே கடினமான பயணங்களை இதற்கு முன் மேற்கொள்ளாதவர்களாக இருக்கலாம். ஆகவே, அவர்களது சிரமங்களைப் புரிந்துகொண்டு அதற்குத் தகுந்தவாறு அவர்களை வழிநடத்திச் செல்ல வேண்டும். இப்படிக் கரிசனத்துடன் நடந்துகொள்வதால், அவர்களது பயணத்தை, நல்ல முறையில் அனுபவிப்பார்கள்.

- **இயற்கை குறித்து மேன்மேலும், கற்றுக்கொள்ளும் ஆர்வமுடையவராக இருப்பார்**
  இயற்கை நமக்கு ஒவ்வொரு நாளும் புதுப்புது விஷயங்களைக் கற்றுக்கொடுத்துக்கொண்டே இருக்கும். ஆகவே, எல்லா உயிரினங்களைப் பற்றியும், எல்லாமும், எல்லாருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஒருவேளை, சுற்றுலாவினர் கேட்கும் சந்தேகங்களுக்கு விடை தெரியவில்லை எனில் வெளிப்படையாகத் தெரியவில்லை என்பதை ஒப்புக்கொண்டு, அதற்கான விடையைக் கண்டுபிடித்து அவர்களைப் பின்னர் தொடர்புகொண்டு தெரிவிக்க வேண்டும். சுற்றுலாப் பயணிகளின் வரத்து குறைவாக அல்லது முற்றிலும் இல்லாத காலங்களில் (Off season) இயற்கை வரலாறு குறித்துப் படித்தும், தெரிந்தவர்களிடத்தில் கேட்டும் தெரிந்துகொள்ள வேண்டும். இயற்கைப் பாதுகாப்பு சார்ந்த நடவடிக்கைகளில், காட்டுயிர்

கணக்கெடுப்பில், இயற்கை சார்ந்த மக்கள் அறிவியல் திட்டங்களில் ஈடுபடுவது, காட்டுயிர் ஆராய்ச்சியாளர்களின் களப்பணியில் தன்னார்வலர்களாகத் தொண்டு செய்வது போன்ற நடவடிக்கைகளின் மூலம் நாம் நிறைய கற்றுக்கொள்ள முடியும். பறவைகள், பூச்சிகள், தாவரங்கள் போன்ற உங்களுக்குப் பிடித்த உயிரினங்களைப் பற்றி மேன்மேலும் அறிந்துகொள்வதும் நல்லது.

- ***கருத்தை சுவாரசியமாகச் சொல்லத் தெரிய வேண்டும்***
  கானுலாவின் போது ஒரு பறவையைப் பற்றியோ, தாவரத்தைப் பற்றியோ கூறும்போது, அவற்றைப் பற்றிய விஷயங்களைப் பாடத்தில் இருப்பதுபோல ஒப்பிக்காமல், அவற்றின் பெயர்களை மட்டும் சொல்லாமல், அவற்றைப் பற்றி சுவாரசியமாக ஒரு கதை போலச் சொல்ல வேண்டும். இப்படிச் சொல்வதாலேயே விருந்தினர்களுக்கு நாம் சொல்லும் தகவல் மறக்காமல் இருக்கும். அந்த உயிரினங்களைப் பற்றிய உங்களது சொந்த அனுபவங்களையும் கூறலாம்.



இயற்கை வழிகாட்டியாளர்களின் திறமைகள்




- தெளிவாக விளக்குதல்
- கூர்ந்து கவனித்தல்
- கானுயிர் சார்ந்த அறிவு

இயற்கை வழிகாட்டியாளர்கள் வைத்திருக்க வேண்டியவை



- பேனா, பென்சில், குறிப்பேடு
- களக்கையேடு
- இருகண்நோக்கி (பைனாகுலர்)
- தொலைநோக்கி (spotting scope)
- இயற்கை, கானுயிர் சார்ந்த மொபைல் செயலிகள்

இயற்கை நடைக்குச் செல்லும் முன் செய்ய வேண்டியவை



- நாம் சுற்றுலாவினருடன் ஓரிடத்திற்குச் சொல்லும் முன் அந்த இடம் வனத்துறைக்கோ அல்லது தனியாருக்கோ சொந்தமான இடமாக இருப்பின் அவர்களிடம் தகுந்த அனுமதியை முன்கூட்டியே பெற்றிருக்க வேண்டும்.
- சுற்றுலாவினரை எந்த இடத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டுமோ அந்த இடத்திற்கு எந்தப் பாதை அல்லது தடம் வழியாகச் செல்ல வேண்டும் என்பதை முன்கூட்டியே தீர்மானிக்க வேண்டும். அந்த இடம் கூட வரும் சுற்றுலாவினரின், வயது, ஆர்வம், போன்றவற்றிற்கு உகந்த இடமா என்பதையும் புரிந்துவைத்திருக்க வேண்டும். அந்த இடத்தில் எவ்வளவு நேரம் செலவழிக்க வேண்டும், என்னென்ன வகையான கானுயிர்களைக் காணலாம் என்பதையும் தெரிந்துவைத்திருக்க வேண்டும்.
- அந்த இடத்திற்கு எப்போது செல்ல வேண்டும் (காலையிலா/ மாலையிலா) என்பதையும், வெயில் கடுமையாக இருக்குமா? மழை வருவதற்கான அறிகுறிகள் ஏதும் உள்ளதா என்பதையும், அதற்குத் தகுந்த ஏற்பாடுகளையும் செய்து, கூட வரும் சுற்றுலாவினருக்கும் இதைப் பற்றியெல்லாம் தெரிவிக்க வேண்டும்.

- அந்த இடத்திற்கு நீங்கள் முதன்முறையாகச் செல்கிறீர்கள் எனில் அந்த இடத்தைப் பற்றிய முழு விவரங்களையும், படித்தும், கேட்டும் தெரிந்துவைத்திருக்க வேண்டும்.
- தேவைப்பட்டால் முந்தைய நாளே அங்கு சென்று தேவையான விவரங்களைப் பார்த்து அறிந்து வர வேண்டும்.
- உங்களுக்குத் தேவையான பொருட்கள் அனைத்தையும் முன்கூட்டியே எடுத்துச் செல்வது நல்லது. அதுபோலவே கூட வரும் சுற்றுலாவினருக்குத் தேவைப்படும் பொருட்களை எடுத்துவருமாறு அவர்களுக்கு முன்கூட்டியே அறிவுறுத்த வேண்டும்.

பயணத்தின்போது எல்லா விஷயங்களும் சரியாக அமையும் என்று சொல்ல முடியாது. எடுத்துக்காட்டாக, எதிர்பாராவிதமாக மழை வரலாம். இது போன்ற விஷயங்களை கூடவருபவர்கள் புரிந்துகொள்வார்கள். எனினும் நமது கவனக்குறைவால், சுற்றுலாவினருக்கு எந்த விதத்திலும் அசௌகாரியம் ஏற்படாமல் பார்த்துக்கொள்வது அவசியம்.



1. இடத்தை அடைய எவ்வளவு நேரமாகும்


2. அந்த இடத்தின் சிறப்புத் தன்மை

3. சுற்றுலாவினரின் உடல் தகுதி

4. சுற்றுலாவினருக்குப் பிடித்த உயிரினங்களை அங்கே காண முடியுமா?

5. சுற்றுலாவினரின் வயது, உடல் தகுதி, விருப்பம் இதற்குத் தகுந்தவாறு செல்லுமிடத்தைத் தேர்வு செய்யவும்

இயற்கை வழிகாட்டுதல் ஓர் அறிமுகம்



கானுலாவின் போதும், இயற்கை நடையின் போதும், இயற்கை சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம், விருந்தினரின் அனுபவத்தையும், இயற்கை குறித்த புரிதலையும் மேம்படுத்த முடியும். இங்கே சொல்லப்பட்டவை ஆலோசனைகளே. இடத்திற்கு ஏற்றார்போல இவற்றை மாற்றிக்கொள்ள வேண்டும்.

இந்தச் செயல்பாடுகளை அடிக்கடிச் செய்வதன் மூலமாகவே மேன்மேலும் மெருகேற்ற முடியும்.

பயணத்தைத் தொடங்குதல்

- இன்முகத்தோடு வரவேற்க வேண்டும்
- உங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளுங்கள்
- என்ன செய்யப் போகிறோம் என்பதை முன்கூட்டியே தெரிவிக்கவும்
- செல்லும் இடம் எப்படிப்பட்டது, செல்ல எவ்வளவு நேரமாகும், பாதை கரடுமுரடானதா, சமதளப் பாரப்பா, எளிதில் செல்ல முடியுமா, என்னென்ன உயிரினங்களை, வாழிடங்களைப் பார்க்கலாம் என்பதை விளக்கவும்.

- செல்லும் இடத்திற்குத் தேவையான பொருட்களை விருந்தினர்கள் எடுத்துக்கொண்டார்களா என்பதை கேட்டுக்கொள்ளவும் (எ.கா) தண்ணீர், உணவு, சரியான உடை , காலணி போன்றவை.
- செல்லுமிடத்தில் பாதுகாப்பாக இருக்க வேண்டிய அவசியத்தை எடுத்துச் சொல்லவும் (எ.கா). எளிதில் வழுக்கிவிடும் பகுதிகள் உள்ளதா, முட்கள் நிறைந்த இடத்தைக் கடக்க வேண்டுமா என்பது போன்ற தகவல்கள்.
- செல்லும்போது செய்யக்கூடியவை, செய்யக்கூடாதவை இரண்டையும் விளக்கிச் சொல்லவும். (நன்னெறி குறித்த பகுதியை படிக்கவும்).
- மிகுந்த உற்சாகத்துடன் “சரி போகலாமா” எனத் தொடங்கவும்.



கவனிக்கும் வரிசை முறை

ஒரு உயிரினத்தைப் பார்த்தவுடன் கூட வந்திருக்கும் விருந்தினரும், அதைக் கண்டு மகிழ இயற்கை வழிகாட்டியாளர்கள் ஒரு சில படிநிலைகளைப் பின்பற்றுவது அவசியம்.

ஆரம்பத்தில் இந்தப் படிநிலைகளை வரிசையாகச் செயல்படுத்துவது சற்றுச் சிரமமாகத் தோன்றலாம். ஆனால், நாளடைவில் தன்னிச்சையாகவே இந்தச் செயல்பாடுகளை ஒரு இயற்கை வழிகாட்டியாளரால் செய்ய முடியும்.

1. முதன்முதலாகப் பார்த்த தருணம் (Moment of Discovery - MOD)
2. அனைவரும் பார்த்துவிட்டனரா என உறுதிசெய்தல்.
3. பொறுமையாகப் பார்க்கவும் கேட்கவும் நேரமளித்தல்.
4. பார்க்கும் உயிரினத்தைச் சுட்டிக்காட்டி விளக்குதல்.
5. நிகழ்வை முடித்துவிட்டு அடுத்த இடத்திற்கு அழைத்துச் சொல்லுதல்.

கானுலா செல்லும்போது நீங்கள் ஒரு மலையணிலைப் பார்ப்பதாக எடுத்துக்கொள்வோம். அப்போது செய்ய வேண்டியவற்றை வரிசையாகக் காணலாம்.

1. முதன்முதலாகப் பார்த்த தருணம்
(Moment of Discovery - MOD)

கானுலா, இயற்கை நடையின்போது ஒரு குறிப்பிட்ட உயிரினத்தை முதன்முதலாகப் பார்த்தத் தருணத்தில் எப்படி நாம் எதிர்வினையாற்றுகிறோம் என்பது மிகவும் முக்கியம். இதை ஆங்கிலத்தில் Moment of Discovery (MOD) என்பர்.





2. அனைவரும் பார்த்துவிட்டனரா என உறுதிசெய்தல்.

எல்லோரும் பாத்துவிட்டீர்களா? எனக் கேட்டு உறுதி செய்தல் அவசியம்





3. பொறுமையாகப் பார்க்கவும், கேட்கவும், நேரமளிக்கவும்

நீங்கள் பார்த்தையும் கேட்டதையும் அனைவரும் பொறுமையாகவும், அமைதியாகவும் பார்த்து ரசிக்க தகுந்த நேரமளிக்க வேண்டும்.





4. பார்க்கும் உயிரினத்தைச் சுட்டிக்காட்டி விளக்குதல்

இப்போது நாம் பார்க்கும் உயிரினத்தைப் பற்றித் தெளிவாக விளக்கிச் சொல்ல வேண்டும். அதன் பெயரைக் குறிப்பிடுவதோடு, அது என்னென்ன செயல்களைச் செய்கிறது, அதன் உடலில் தென்படும் நிறங்கள், உருவ அமைப்பு போன்றவற்றை விளக்கிச் சொல்ல வேண்டும். அந்த உயிரினத்தின் எடை, உருவ அளவு முதலிய புள்ளிவிவரங்களைச் சொல்வதைவிட, அது அங்கே என்ன செய்கிறது என்பதை சற்று விளக்கிக் கூறுவது ஒரு மறக்க முடியாத அனுபவமாக இருக்கும்.


வால் புசுபுசுன்னு எவ்ளோ நீளமா இருக்கு பாருங்க! உடம்பில் பல நிறங்கள் இருக்கு தெரியுதா?


மரப்பட்டைய பிச்சி எடுத்து அழகா கையில வைச்சி சாப்பிடுது பாருங்க!


ஆகா! வெயில் பட்ட உடனே உடம்பில் இருக்கும் நிறமெல்லாம் தெளிவா தெரியுது பாருங்க!


அட! தலைகீழா தொங்குதுபாருங்க. கால்கள் உறுதியா இருந்தால் தான் இப்படித் தொங்க முடியும்.
மரத்துக்கு மரம் நல்லா தாவும்

நாம் மற்றுமொரு எடுத்துக்காட்டைக் காணலாம். நீங்கள் ஒரு அத்தி மரத்தில் பெரிய இருவாச்சி ஒன்று பழங்களைச் சாப்பிடுவதைக் காண்கிறீர்கள் என வைத்துக்கொள்வோம். உங்களுடன் வந்த விருந்தினர்கள் அனைவரும் அதைப் பார்த்து, மகிழ்ந்த பின் கீழ்க்கண்ட விவரங்களை அவர்களுக்குச் சொல்லலாம்:

- இருவச்சிகள் பெரிய பறவைகளாக இருந்தாலும் ஒரு சிறிய அத்திப்பழத்தை எவ்வளவு இலாவகமாக அலகின் நுனியால் எடுத்து, மேலே தூக்கிப்போட்டு லபக்குன்னு விழுங்குகிறது!
- அவை ஏதோ ஒரு பழத்தை எடுக்காமல் பழுத்தவற்றைத் தேடி எடுத்து உண்கின்றன
- அமர்ந்திருக்கும் மரத்தின் பெயர்
- விதை பரவலில் இருவாச்சி போன்ற பழம் உண்ணும் பறவைகள் வகிக்கும் முக்கியப் பங்கு
- அந்த மரத்தில் சென்ற ஆண்டிற்கும் இப்போது இருக்கும் பழங்களின் எண்ணிக்கையின் அளவு குறித்து சொல்லலாம்.
- இருவாச்சியின் கண்களின் நிறத்தை வைத்து ஆண், பெண் எது என்பதைச் சொல்லலாம்.

இருவாச்சிகள் மரப்பொந்தில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் பண்பு அனைவரையும் வியப்பிலாழ்த்தும். ஆனால், இப்போது நாம் அதைப் பார்த்துக்கொண்டிருக்கவில்லை என்பதால் வேறு ஒரு சந்தர்ப்பத்தில் அது குறித்துச் சொல்லலாம்.

5. நிகழ்வை முடித்துவிட்டு அடுத்த இடத்திற்கு அழைத்துச் சொல்லுதல்

அனைவரும் பார்த்தவுடன் தகவல்களைப் பரிமாறிக்கொண்ட பின் அடுத்த இடத்திற்குப் போகும் முன் நடந்ததைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்லலாம்.



அடுத்த முறை நீங்கள் விருந்தினரை இதே வரிசையில் நிகழ்வை நடத்திப் பார்க்கவும்.

இயற்கை நடையில் தாவரங்களைப் பற்றி விவரித்தல்


சென்ற பகுதியில் விவரங்களைக் கவனிக்கும் வரிசை முறையில் தாவரங்களைப் பற்றிச் சொல்லும்போது சிறிய மாற்றங்களைச் செய்ய வேண்டும். மற்ற உயிரினக்களைப் போலல்லாமல் தாவரங்களை அருகில் சென்று தொட்டுப் பார்க்கும் அனுபவம் கிடைக்கும்.


தாவரங்களின் பெயர்களையும், அவற்றின் மருத்துவக் குணங்களைப் பற்றி மட்டுமே சொல்லாமல், அந்த வாழிடத்தில் ஒரு குறிப்பிட்ட தாவரம் வகிக்கும் முக்கியப் பங்கு, எந்தெந்த உயிரினங்கள் அதைச் சார்ந்துள்ளன, அத்தாவரத்திற்கு அப்பகுதியில் வழங்கப்படும் பெயர், அதைப் பற்றிய சுவாரசியமான தகவல்கள் ஏதேனும் இருப்பின் அவற்றையும் சொல்லலாம்.




கொத்தில் மூணு இலை இருக்கு பாருங்க
ஏதோ பூச்சி இந்த இலையை சாப்டிருக்கு


பூ அழகா இருக்கு இல்லயா?
கோடையில் இந்த மரம் பூத்துக் குலுங்கும். இந்த சிவப்பு மலரில் உள்ள தேனைக் குடிக்க நிறைய பறவைகள் வரும். அலகை உள்ளே விட்டு தேன் குடிக்கும் போது பூவில் உள்ள மகரந்தம் பறவைகளின் முகத்தில் ஒட்டிக்கொள்ளும்.


இதோட காய் உள்ளே ஒரே ஒரு தட்டையான விதை இருக்கும்


இதை Flame of the forestன்னு சொல்லுவாங்க இல்லையா?
ஆமாம். தமிழில் இதற்கு புரசு என்று பெயர்

விருந்தினரைக் கவனித்துக் கொள்ளுதல்

இயற்கை நடைக்கு நாம் அழைத்துச் செல்லும் விருந்தினரை நல்ல முறையில் நடத்துவதும், உபசரிப்பதும் அவசியம். அவ்வப்போது அவர்களது நலனை விசாரிப்பதும் நல்லது. கூடியவரையில் அவர்களது தேவைகளை உணர்ந்து செயல்படுவது அவர்களது பயணத்தை ஒரு நல்ல அனுபவமாக மாற்றும். எடுத்துக்காட்டாக, அவர்கள், களைப்படைந்திருப்பதாகத் தெரிந்தால் நிழலான பகுதிக்கு அழைத்துச் சென்று சற்று இளைப்பாறிவிட்டு பின்னர் நடையைத் தொடங்கலாம். கரடுமுரடான பாதையிலோ, மேடான பகுதிகளில் ஏறும்போதோ கைகொடுத்து அழைத்துச் செல்வது போன்ற பண்புகள் ஒரு பொறுப்பான இயற்கை வழிகாட்டியாளரிடம் இருக்க வேண்டிய நல்ல பண்புகளாகும்.










நேர மேலாண்மை

இயற்கை நடை நல்ல முறையில் நிகழ வேண்டுமானால், திட்டமிட்டபடி நேரத்தைக் கடைப்பிடித்துச் செயலாற்றுதல் அவசியம். நிகழ்வு தொடங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பே விருந்தினர்களைச் சந்தித்தல் நல்லது. சரியான நேரத்தில் தொடங்கினால்தான் சொன்ன வேளையில் நிகழ்வை முடிக்க முடியும். ஒருவேளை நிகழ்வு முடிய தாமதமானாலோ, திட்டமிட்டபடி இடத்திற்குப் போக முடியாமல் போனாலோ விருந்தினரிடம் இது குறித்து முன்கூட்டியே தெரிவித்து அவர்களது ஒப்புதலைப் பெறுவது நல்லது.



தகவல் பரிமாற்றம்

இயற்கை உலாவின் போது பார்க்கும், சில உயிரினங்களைப் பற்றிய விவரங்கள் அல்லது விருந்தினர் கேட்கும் சந்தேகங்களுக்கு நமக்குப் பதில் தெரியவில்லை எனில் அதற்கான விடையை அறிந்துகொண்டு பின்னர் தெரிவிப்பது இயற்கை வழிகாட்டியாளரின் கடமையாகும். ஒரு குறிப்பிட்ட தாவரத்தின் அல்லது உயிரினத்தின் பெயரோ, அவற்றின் பண்புகள் குறித்தோ, அல்லது விருந்தினர் கேட்கும் சந்தேகத்திற்கோ நமக்கு அந்தத் தருணத்தில் பதில் தெரியாமல் போகலாம். அல்லது சட்டென நினைவுக்கு வராமல் போகலாம். அவ்வேளையில் தவறான தகவலை அவர்களுக்குச் சொல்லிவிடாமல், "எனக்குத் தெரியவில்லை, அறிந்தவர்களிடம் கேட்டோ, நூல்களை படித்து விட்டோ பின்னர் சொல்கிறேன்" என நேர்மையாகப் பதிலளித்தல் நல்லது. விருந்தினர்கள் கேட்ட சந்தேகத்தை மறந்துவிடாமல் கூடிய விரைவில் கண்டறிந்து அவர்களுக்குத் தெரிவிப்பது ஒரு இயற்கை வழிகாட்டியாளரின் கடமை.



எல்லாப் புலன்களையும் பயன்படுத்துதல்

இயற்கையான வாழிடங்களை உற்று நோக்குவதன் மூலம் நாம் பலவிதமான அனுபவங்களையும் பெறமுடியும். இதற்கு நமது பார்த்தல், கேட்டல், தொடுதல், நுகர்தல், சுவைத்தல் என எல்லாப் புலன்களையும் பயன்படுத்தி இயற்கையின் பலவிதமான கூறுகளை அறிந்து பல வகையான அனுபவங்களைப் பெற முடியும்.

பூவின் வாசனையை நுகரச் செய்தல், காட்டுச் செடிகளில் உண்ணக்கூடிய பழங்கள் இருப்பின் அவற்றைச் சுவைக்க வைத்தல், இலையின் பரப்பு சொறசொறப்பாக இருப்பதை விரல்களால் தடவிப் பார்த்து அறிதல், கீழே விழுந்திருக்கும் பறவைகளின் இறகைத் தொட்டுப்பார்த்தல், போன்ற செயல்பாடுகள் அவற்றைப் பற்றி எளிதில் புரிந்துகொள்ளவும் விருந்தினர்களுக்கு ஒரு புதுவித அனுபவத்தையும் கொடுக்கும். எனினும், பூச்சிகளைப் பிடித்தல், ஒவ்வாமை ஏற்படுத்தக்கூடிய தாவரங்களைத் தொடுதல் போன்ற செயல்களை முற்றிலும் தவிர்க்க வேண்டும். விருந்தினரின் பாதுகாப்பும், இயற்கையை எந்தவிதத்திலும் தொந்தரவு செய்யாமலும் இருப்பதே முதன்மையாக இருத்தல் வேண்டும்.



களக் கையேடுகளைப் பயன்படுத்துதல்

இயற்கை நடைக்குச் செல்லும்போது கைவசம் களக் கையேடுகளைத் தயாராக வைத்திருப்பது நல்லது. விருந்தினர்கள் பார்க்கத் தவறும் (வேகமாகப் பறந்து, ஊர்ந்து செல்லும் உயிரினங்கள்) அல்லது சரியாகப் பார்க்க முடியாமல் போகும் உயிரினங்களை (தூரமாகவோ, இலைகளுக்குள் மறைந்து இருக்கும் போது) இக்களக் கையேடுகளின் மூலம் காண்பிப்பது நல்லது.





விருந்தோம்பலும் கவனித்துக்கொள்ளுதலும்

விருந்தினர்களை இயற்கை நடைக்கு அழைத்துச் செல்வது, முடிந்தவுடன் விடைபெற்றுத் திரும்புவது மட்டுமே ஒரு இயற்கை வழிகாட்டியாளரின் வேலை அல்ல. விருந்தினர்களின் நினைவில் நீக்கமற நிறைந்திருக்கும் நல்ல அனுபவங்களைத் தர முயல வேண்டும். அவற்றில் சில:

- நடை முடிந்தவுடன் அங்குள்ள நீரோடைகளில் தங்கள் கால்களை நனைக்கச் சொல்லலாம். பழங்களைச் சாப்பிடக் கொடுக்கலாம்.
- மரத்தின் அடியில் அமர்ந்து கண்களை மூடி இயற்கையின் ஓசையை (பறவைகளின் குரலொலி, பூச்சிகளின் ரீங்காரம், காற்றில் சலசலக்கும் இலைகளின் ஓசை) கேட்கச் சொல்லலாம்.
- அந்த ஊரில் மட்டுமே கிடைக்கும் கைவினைப் பொருட்களை நினைவுப் பரிசாகக் கொடுக்கலாம்.
- அருகில் உள்ள இயற்கை வள மையங்களுக்கு, படகுச் சவாரிக்கு அழைத்துச் செல்லலாம்.
- அப்பகுதியில் வாழும் பூர்விகக் குடியினரைச் சந்தித்துப் பேசி அவர்களுடைய நாட்டுப்புறக் கதைகளைக் கேட்க வைக்கலாம்.

...இவையெல்லாம் எடுத்துக்காட்டுகளே. உங்களால் முடிந்தவற்றைச் விருந்தினர்களுக்குச் செய்யலாம்.





இயற்கை நடையின் முடிவில்

இயற்கை நடை முடியப்போகும் சில நிமிடங்களுக்கு முன்பே விருந்தினர்களிடம் அதைப் பற்றி தெரிவிப்பது நல்லது. முடிந்தவுடன் சட்டென பிரிந்து சென்றுவிடாமல், ஓரிரு நாட்கள் நீடிக்கும் இயற்கை நடையாக இருப்பின் ஒவ்வொரு நாளின் முடிவிலும், அன்று பார்த்த முக்கியமான உயிரினங்கள், சிறப்பான தருணங்கள் பற்றிப் பேசலாம். விடைபெறும் முன் அதுவரையில் பார்த்தவற்றில் விசேஷமான உயிரினங்களை, தருணங்களை மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்திப் பேசுவது நல்லது. இது போன்ற நினைவூட்டல்கள் விருந்தினர்களை மனநிறைவுடனோ, மகிழ்ச்சியான மனநிலையுடன் இருக்கச் செய்யும். சன்மானத்தை எதிர்பார்க்கும் வகையில் குறிப்பிட்டுப் பேசுவதைத் தவிர்ப்பது நல்லது.






இயற்கை வழிகாட்டியாளர்களுக்கும் சூழல்சார் சுற்றுலாவுக்குமான நன்னெறிகள்

இயற்கையான வாழிடங்கள் மனிதர்களின் பல்வேறு நடவடிக்கைகளால் சீரழிக்கப்பட்டு வருவது நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. கானுலா செல்லும்போதோ, இயற்கையான வாழிடங்களுக்குச் சுற்றுலாவினரை அழைத்துச் செல்லும்போதோ அந்த இடத்திற்கும், அங்குள்ள உயிரினங்களுக்கும் எந்த விதத்திலும் தீங்கிழைக்காமல் பொறுப்புடன் பார்த்துக்கொள்வது ஒரு இயற்கை வழிகாட்டியாளரின் கடமையாகும். சூழல்சார் சுற்றுலா என்பது பெரும்பாலும் வசதிபடைத்தவர்களின் சிறப்புரிமையாகும். ஆகவே, நாம் பார்த்து அனுபவிக்கும் இயற்கையான வாழிடங்களுக்கு நம்மால் முடிந்தவரை எந்தத் தீங்கும் விளைவிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

நன்னெறிகள் என்பது, சட்டமோ விதியோ அல்ல. அவை ஒவ்வொரு தனிமனிதரின் தனிப்பட்ட ஒழுக்கம் சார்ந்த கொள்கைகள் எனலாம்.

இயற்கை நடையின்போது நிகழக் கூடிய விதிமீறலான, இயற்கைக்கு ஒவ்வாத செயல்பாடுகள் சிலவற்றை இங்கே காணலாம். இவற்றை நாம் ஒவ்வொருவரும், குறிப்பாக இயற்கை வழிகாட்டியாளர்களும் முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும்.



குப்பை போடாதீர்கள்

இயற்கையான வாழிடங்களில் சகித்துக்கொள்ள முடியாத ஒரு காட்சி என்னவென்றால், அது மனிதர்களாகிய நாம் வீசி எறியும் குப்பைகள்தான். குறிப்பாக, பிளாஸ்டிக் குப்பைகள். இவை சூழலை மாசுபடுத்தும். அவற்றில் ஒட்டியிருக்கும் உணவுப் பொருட்களை உண்ணவரும் காட்டுயிர்கள், தவறுதலாக பிளாஸ்டிக் பைகளையும் உட்கொள்வதால் இறக்க நேரிடலாம். சாலையோரங்களில் தூக்கி எறியப்படும் உணவுப் பண்டங்களை உண்ண வரும் காட்டுயிர்கள், வேகமாகச் சீறி வரும் வாகனங்களில் அடிபட்டு பரிதாபமாக உயிரிழக்கின்றன.

இயற்கை நடைக்குச் சொல்லும்போது இயன்றவரை பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். தவிர்க்க முடியாத காரணங்களால் உணவுப் பண்டங்களை எடுத்துச் சொல்லும் பிளாஸ்டிக் பைகளையோ, பாட்டில்களையோ பயன்படுத்திய பிறகு, அவற்றை நாம் சென்ற இடத்திலேயே வீசிவிட்டுச் செல்லாமல், முறையாகக் குப்பைத்தொட்டிகளில் போட வேண்டும்.



சத்தமிட வேண்டாம்

இயற்கைச் சூழலில் நடத்து சொல்லும்போது உரக்கப் பேசுவதை அனைவரும் தவிர்க்க வேண்டும். கூச்சலிடுவது பல உயிரினங்களுக்குத் தொந்தரவாக அமையும். அதே வேளையில் அவற்றைக் கண்டு மகிழும் வாய்ப்பும் நமக்குக் கிடைக்காமல் போய்விடும். அனைவரும் அமைதிகாத்தால் இயற்கைச் சூழலில் எழும் பல்வேறு ஓசைகளை (குறிப்பாக பறவைகளின் குரலொலி, பூச்சிகளின் ரீங்காரம் போன்றவற்றை) கேட்டு ரசிக்கவும், புதிய குரலோலிகளை அறிந்துகொள்ளவும், உயிரினங்களின் பண்புகளை அமைதியாக உற்றுநோக்கவும் முடியும்.



இயற்கையான வாழிடம் கேளிக்கைக்கான இடமல்ல

இயற்கையான வாழிடங்களில் மது அருந்திவிட்டு பாட்டில்களை உடைத்து அங்கேயே போடுவது, பிளாஸ்டிக் குப்பைகளையும், மிச்சமீதி உணவுகளையும் அங்கே வீசி எறிவது போன்ற காட்சிகளை நாம் பல சுற்றுலாத் தளங்களில் பார்த்திருப்போம். சிலர் அமைதியைக் குலைக்கும் வகையில் ஒலிபெருக்கி மூலம் பாடல்களை உரக்க ஒலிக்கச் செய்வதையும் கண்டிருப்போம். இவை யாவும் அந்த வாழிடத்தின் தூய்மையையும் அமைதியையும் குலைக்கும். மேலும், அங்கே விட்டுச் செல்லப்படும் உணவுப் பொருட்களை உட்கொள்வதால் காட்டுயிர்கள் உயிரிழக்க நேரிடும். தூக்கி எறியப்படும் அணைக்கப்படாத சிகரெட் துண்டுகள் காட்டுத் தீ பரவுவதற்குக் காரணமாகலாம்.



எதையும் எடுக்கவோ பறிக்கவோ வேண்டாம்

இயற்கை வாழிடங்களுக்குச் சென்றுவிட்டு, திரும்பி வரும்போது நமது காலடித் தடங்களை மட்டுமே அங்கு விட்டுவர வேண்டும்.

அது போலவே அங்கிருந்து எதையும் பறிக்கவோ, எடுத்துச் செல்லவோ கூடாது. ஞாபகார்த்தமாக வைத்துக்கொள்ள ஒளிப்படங்களை மட்டுமே எடுத்துவர வேண்டும்.


அழகான மலர்களைக் கண்டால், பறிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றலாம். ஆனால், மலர் என்பது தாவரத்தின் இனப்பெருக்கத்திற்கும், பல வகையான பூச்சிகளுக்கும், பறவைகளுக்கும் உணவளிக்கும் ஒரு முக்கியமான பாகமாகும். அதை உணர்ந்து நாம் அவற்றைப் பறிப்பதைத் தவிர்க்க வேண்டும். அது போலவே கீழே கிடக்கும் பறவைகளின் உதிர்ந்த இறகுகள், வித்தியாசமான நிறம் அல்லது வடிவத்தில் இருக்கும் கற்கள், போன்றவற்றையும் எடுத்து வருவதைய முற்றிலும் தவிர்க்க வேண்டும்.



உயிரினங்களைத் தொடவோ, தூக்கவோ கூடாது


உயிரினங்களை, குறிப்பாகப் பூச்சிகள், தவளைகள், பாம்புகள் போன்றவற்றைத் தொடவோ, பிடிக்கவோ கூடாது. விருந்தினர்களின் முன் சாகசம் செய்வதாக நினைத்து இவற்றைப் பிடித்துக் காண்பிப்பது ஒரு தவறான செயல். இது மற்றவர்களுக்கும் ஒரு தவறான முன்னுதாரணமாக அமைந்துவிடும். சிலர் ஒளிப்படம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக இத்தகைய தவறான செயல்களில் ஈடுபடுவார்கள். யாரேனும் அப்படிச் செய்வதைக் கண்டால், அதைத் தடுப்பதும், அப்படிச் செய்வதால் ஏற்படும் பாதிப்புகளை அவர்களுக்கு எடுத்துச் சொல்வதும் இயற்கை வழிகாட்டியாளரின் கடமையாகும்.

உயிரினங்களைப் பிடிப்பதால் நமக்கும் அவற்றிற்கும் பலவிதமான பாதிப்புகள் ஏற்படும். நம்மிடமிருந்து அவற்றிற்குத் தொற்று நோய்கள் பரவும் வாய்ப்புகள் உண்டு. சிறிய உயிரினமாக இருந்தாலும் அவையும் கூட மனஉளைச்சலுக்கு ஆளாகும். நம்மையும் அறியாமல் அவற்றின் உடற்கூறில் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடும் (எ.கா. நாம் பூச்சிகளைப் பிடிப்பதால் அவற்றின் மிகச் சிறிய கால்கள் முறிந்து போகலாம்). அதுபோலவே நச்சுத்தன்மை கொண்ட உயிரினங்களைத் தொடுவதாலோ, பிடிப்பதாலோ அவற்றைப் பிடிப்பவர்களுக்குப் பாதிப்புகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் அதிகம்.



பறவைகளின் குரலொலிகளை ஒலிக்கச் செய்து அவற்றைத் தொந்தரவு செய்யக் கூடாது

நாம் பார்க்க வேண்டும் என்பதற்காகவோ, நல்ல ஒளிப்படங்கள் எடுக்க வேண்டும் என்பதற்காகவோ பறவைகளின் குரலொலிகளை ஒலிபரப்பி அவற்றை வரவழைக்க முயல்வது ஒரு மோசமான செயலாகும். இது பறவைகளை வெகுவாகப் பாதிக்கும். அவற்றின் பண்புகளில் மாற்றத்தை ஏற்படுத்தி மனஉளைச்சலுக்கு ஆளாக்கும். அவற்றின் இனப்பெருக்கத்தையும் பாதிக்கும். பறவை ஆராய்ச்சியாளர்கள் தகுந்த பயிற்சியுடனும், கட்டுப்பாட்டுடனும், குறிப்பாக வனத்துறையிடமிருந்து தகுந்த முன் அனுமதி பெற்றும், இது போன்ற முறைகளைத் தங்கள் ஆராய்ச்சிகளுக்காகப் பயன்படுத்துவதுண்டு. ஆனால், சுற்றுலாவினர் இவ்வாறு செய்வது ஒரு கொடூரமான செயலாகும். ஆகவே, இயற்கை வழிகாட்டியாளர்கள் இது போன்ற செயல்களை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும்.



கண்களைச் கூசச் செய்யும் டார்ச், பிளாஷ்களை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும்.

இரவு நேரத்தில் உயிரினங்களைப் படமெடுப்பதற்காகச் சக்தி வாய்ந்த, அதிக ஒளியை உமிழும் டார்ச். காமிரா ப்ளாஷ் போன்றவற்றைப் பயன்படுத்துவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். இரவாடிகளான ஆந்தைகள், புனுகுப் பூனைகள், மான்கள் ஆகியவை ஒளியால் எளிதில் பாதிக்கப்படக்கூடிய கண்களைக் கொண்டவை. அவற்றின் மேல் இவ்வாறு ஒளியைப் பாய்ச்சுவதால் அவை பெரும் பாதிப்புக்கு உள்ளாகக்கூடும். ஒளியை மட்டுப்படுத்தும் உபகரணங்களையும், அதிக ஒளியை உமிழாத டார்ச்களையும், ப்ளாஷ்களையும் பயன்படுத்தி படமெடுக்க வேண்டும். படமெடுத்தவுடன் உடனடியாக அங்கிருந்து அகன்றுவிட வேண்டும்.



உணவிட்டு ஈர்த்தல் தவறு

குறிப்பிட்ட உயிரினங்களைப் பார்க்க வேண்டும், அவற்றைப் படமெடுக்க வேண்டும் என்பதற்காக அவற்றுக்கு உணவிட்டு ஈர்ப்பதை (baiting) முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும். பறவைகளுக்குத் தானியங்களை வைத்து வரவழைப்பது, புலி, சிறுத்தை போன்ற ஊனுண்ணிகளுக்கு கோழி இறைச்சியை வைத்து ஈர்ப்பது போன்ற செயல்களால், அந்த உயிரினங்கள் தங்களின் இயற்கையான பண்புகளை இழந்து, மனிதர்கள் கொடுக்கும் உணவைச் சார்ந்து வாழும் நிலைக்குத் தள்ளப்படுகின்றன. இது அவற்றின் உடல்நலத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தும். மேலும், இது மனித-காட்டுயிர் உரசலுக்கும் வழிவகுக்கும். அது மட்டுமல்லாமல் காட்டுயிர்களுக்கு இயல்பாகவே மனிதர்களைப் பார்த்தால் ஏற்படும் கூச்சமும், பயமும் இல்லாமல் போய்விடும். இது போன்ற செயல்களில் யாரேனும் ஈடுபடுவதைக் கண்டால் அவர்களுக்கு இச்செயல்களால் ஏற்படும் மோசமான பின்விளைவுகளைப் பற்றி எடுத்துக் கூற வேண்டும். அதையும் மீறி இவை தொடர்ந்தால் தகுந்த அதிகாரிகளிடம் முறையிட வேண்டும்.



பறவைகளின் கூட்டின் அருகில் செல்லக் கூடாது

கூடமைப்பது ஒரு பறவையின் வாழ்வில் மிகவும் முக்கியமான ஒரு பகுதியாகும். அந்த வேளையில் அவற்றின் கூட்டின் அருகில் செல்வதையும், அவற்றை ஒளிப்படம் எடுப்பதையும் முற்றிலும் தவிர்க்க வேண்டும். தூரத்தில் இருந்து இருகண்நோக்கி மூலம் கண்டு மகிழலாம்.




உயிரினங்களைத் துரத்திச் செல்வது தவறு

ஓர் உயிரினம், நம்மைக் கண்டு ஓடுகிறது என்றால் அது நமது அருகாமையைத் தவிர்க்கிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அவற்றைப் பின்தொடர்ந்து துரத்திச் சென்று படமெடுக்கக் கூடாது. தகுந்த இடைவெளியைக் கடைப்பிடித்து அவற்றைக் கண்டுகளிக்க வேண்டும். விரட்டிச் சென்று படமெடுப்பதால் அவற்றின் சக்தி விரயமாகும். மேலும் அவை மன உளைச்சலுக்கும் ஆளாகும்.



உணவிடுதல் தவறு

காட்டுயிர்களுக்கு உணவிடுவதை (feeding) நாம் கருணை என தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறோம். இயற்கையாகத் திரியும் எந்த ஒரு உயிரினமும் தனக்கான உணவைத் தேடிக்கொள்ளும் பண்பும், திறனும் கொண்டவை. நாம் உணவளிப்பதால் அவற்றிற்கு நன்மை செய்வதாக நினைத்துக் கொண்டு, அவற்றிற்குப் பெரும் தீங்கை விளைவித்துக் கொண்டிருக்கிறோம். உணவிட்டு ஈர்ப்பதன் (baiting) விளைவாகக் காட்டுயிர்களுக்கு மனிதர்களின் மீது உள்ள அச்சம் போய்விடுவது போல உணவிடுதலாலும் காட்டுயிர்கள் மனிதர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் நடமாட ஆரம்பித்துவிடும். இது பொதுமக்களுக்குத் தொந்தரவாக அமையும் இதனால் மனித – காட்டுயிர் உரசலும் ஏற்படும். எந்த பயமும் இன்றி சுற்றித் திரிவதால் அவை சாலையில் சீறி வரும் வாகனங்களில் அடிபட்டு சாகவும் கூடும். சில வேளைகளில் நாம் அவற்றின் அருகில் சென்று உணவு ஊட்டுவதால் மனிதர்களிடமிருந்து காட்டுயிர்களுக்கும், காட்டுயிர்களிடமிருந்து மனிதர்களுக்கும் தொற்றுநோய்கள் பரவவும் வாய்ப்புள்ளது.



சட்ட திட்டங்களை மதிக்க வேண்டும்

இந்திய வனப்பகுதிகள் பல பாதுகாக்கப்பட்டவை. அந்த இடத்திற்குச் செல்லும் முன் தகுந்த முன்அனுமதி பெற்றுச் செல்ல வேண்டும். தனியாருக்குச் சொந்தமான பகுதிகளுக்கும்கூட அவர்களின் அனுமதியைப் பெற்ற பின்னரே அங்கு அடி எடுத்து வைக்க வேண்டும். அது போலவே ஒவ்வொரு பகுதிக்கும் சில விதிமுறைகள் இருக்கலாம். (இந்த நேரத்தில்தான் செல்ல வேண்டும், வாகன வேகக் கட்டுப்பாடு என்பது போன்ற). அவற்றை அறிந்து கொண்டு அதற்குத் தகுந்தவாறு நமது பயணத்தைத் திட்டமிட வேண்டும்.






சட்டவிரோத நடவடிக்கைகள் கூடாது

காட்டுயிர்களைப் பாதுகாப்பதற்காக இந்தியாவில் கடுமையான சட்டங்கள் உள்ளன. நாம் எந்த வித சட்டவிரோத செயல்களிலும் ஈடுபடக் கூடாது. குற்றவியல் அல்லது தடைசெய்யப்பட்ட செயலை ஒருவர் செய்வதை நீங்கள் கண்டால், குற்றத்தின் அளவைப் பொறுத்து அதிகாரிகளிடம் புகாரளிக்கலாம். இயற்கைப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.







வேலை நேரத்தில் மட்டுமே மனிதர்கள் அல்லாத பிற உயிரினங்களின் நலனுக்காண நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும் என அவசியம் இல்லை. நமது அன்றாட வாழ்வில் இயற்கைக்குத் தீங்கிழைக்காமல் இருக்க, முடிந்த வரை பாடுபட வேண்டும். எடுத்துக்காட்டாக பிளாஸ்டிக் பை, பாட்டில் போன்றவற்றை முற்றிலும் பயன்படுத்தாமல் தவிர்த்தல், வீட்டுக் குப்பைகளை மட்கும், மட்காத குப்பை என தரம்பிரித்தல் போன்ற செயல்பாடுகள் இந்த பூமிக்கு நம்மால் ஏற்படுத்தப்படும் பாதிப்புகளைக் குறைக்க உதவும்.

நன்றி

இந்தக் கையேட்டை உருவாக்குவதற்கான கருத்துகளை வழங்கிய திவ்யா முத்தப்பாவுக்கும் டி.ஆர். சங்கர் ராமனுக்கும் நன்றி.

இந்நூலின் முதன்மை ஓவியரான மானசா முராரியுடன் பணி புரிந்ததில் மிக்க மகிழ்ச்சி. நாங்கள் சொன்னதைப் புரிந்துகொண்டு, அதைத் தன் கலைப்படைப்பின் மூலம் பொருத்தமாகவும் அழகாகவும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

இந்நூலின் ஆங்கில வடிவத்தை மெய்ப்புத் திருத்தம் செய்து, பயனுள்ள ஆலோசனைகளை வழங்கிய சங்கீதா எஸ் மணி அவர்களுக்கு நன்றி. இந்தக் கையேட்டிலுள்ள தகவல்களைப் பொறுமையுடன் திறம்பட வடிவமைப்பாளரான ஜானவி ராஜனுக்கு எங்கள் நன்றிகளை உரித்தாக்குகிறோம்.

இந்தக் கையேட்டைத் தயாரிப்பதற்கு உறுதுணையாக இருந்த ரோகினி நிலகனி பிலான்த்ரபீஸ், சோழமண்டலம் இன்வெஸ்ட்மென்ட் அண்ட் ஃபைனான்ஸ் கோ. லிமிடெட்., ரெயின்மேட்டர் ஃபவுண்டேஷன் ஆகியோருக்கு நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

தமிழ் மொழிபெயர்ப்பை மெய்ப்புத்திருத்தம் செய்து வடிவமைப்பிலும் உதவிய கி. ஆஷா அவர்களுக்கு நன்றி.

இயற்கை நடை செல்வதற்குத் தேவையானவை:



- ☐ இருகண் நோக்கி (Binoculars)
- ☐ களக் கையேடுகள்
- ☐ முதலுதவிப் பெட்டி
- ☐ நோட்புக்/பேனா
- ☐ கைபேசி
- ☐ கேமரா
- ☐ பருவநிலைக்கு ஏற்ற உடைகள்: மழை பாதுகாப்பு உடை, அட்டைப்பூச்சிகளிடமிருந்து பாதுகாக்கும் காலுறை, தொப்பி… போன்றவை
- ☐ குடிநீர் பாட்டில்

நீங்கள் தேவை என கருதும் பிற பொருட்கள்:

- [ ] நுழைவுச்சீட்டு/அனுமதிச் சீட்டு
- [ ] விருந்தினர்கள்/வண்டி ஓட்டுநர்களை ஒருங்கிணைக்க, தொடர்புகொள்ள தேவையான தகவல்கள்.
- [ ] வானிலை முன்னறிவிப்பைப் பார்த்தல்
- [ ] செல்ல வேண்டிய இடங்களைப் பற்றி அறிந்துகொள்ள அங்கு முன்பே சென்று பார்த்து வருதல்
- [ ] அண்மையில் அந்த இடத்தில் பார்க்கப்பட்ட சில வித்தியாசமான உயிரினங்கள் / நிகழ்வுகள்
  அந்த இடத்தைப் பற்றிய சமீபத்திய செய்திகள் / பல்லுயிர்ப் பாதுகாப்பு சார்ந்த சிக்கல்கள்/ வரலாறு/ கலாச்சாரம்

விருந்தினர்களிடம் சொல்ல வேண்டியவைப் பற்றிய சிறு குறிப்பு:

1.
2.
3.
4.
5.
6.
7.
8.
9.
10.

சுயமதிப்பீட்டுப் பட்டியல்:



உங்கள் இயற்கை உலா எப்படி இருந்தது? உங்கள் விருந்தினர்கள் மகிழ்ச்சியாக இருந்தார்களா? நீங்கள் எதைத் நன்றாகச் செய்தீர்கள்?

_____

_____

_____

குறித்த நேரத்தில் சென்றடைந்தீர்களா?

☐ ஆம்
☐ சரியான நேரத்தில்!
☐ தாமதமாகிவிட்டது

நீங்கள் நன்றாகத் தயார் செய்திருந்தீர்களா?

☐ ஆம்
☐ இன்னும் நன்றாக செய்திருக்கலாம்.

அடுத்த முறை மேலும் சிறப்பாக இருக்க என்ன செய்யலாம்

_____

_____

_____

உங்கள் அறிமுகமும் விளக்கமும் எப்படி இருந்தது?

எந்த வழிகாட்டுதல் நுட்பங்களை நீங்கள் நன்றாகப் பயன்படுத்தியிருந்தீர்கள்?

- ☐ முதன்முதலாகப் பார்த்த தருணம் (MOD)
- ☐ உங்கள் அனைவராலும் பார்க்க/கேட்க முடிந்ததா?
- ☐ பார்க்கவும் கேட்கவும் எடுத்துக்கொண்ட நேரம்
- ☐ பார்க்கும் உயிரினத்தை சுட்டிக்காட்டி விளக்குதல்
- ☐ நிகழ்வை முடித்தல்

விருந்தினர்களைக் சரியான முறையில் கவனமாகப் பார்த்துக் கொண்டீர்களா?

- ☐ ஆம்
- ☐ இன்னும் அதிகமாகச் செய்திருக்கலாம்
- ☐ வாய்ப்பு கிடைக்கவில்லை.

விருந்தினர்கள் இயற்கையை அனுபவிக்க எந்தப் புலனுணர்வைப் பயன்படுத்தினார்கள்?

- ☐ பார்த்தல்
- ☐ கேட்டல்
- ☐ முகர்தல்
- ☐ தொடுதல்
- ☐ சுவைத்தல்

நீங்கள் களக் கையேடுகளைப் பயன்படுத்தினீர்களா?

- ☐ ஆம்
- ☐ இல்லை
- ☐ வாய்ப்புக் கிடைக்கவில்லை
- ☐ களக் கையேடுகள் அல்லது தொலைபேசி போன்ற எதையும் எடுத்துச் செல்லவில்லை!

இயற்கை நடையை ஒரு புன்னகையுடன் முடித்தீர்களா?

- ☐ ஆம்
- ☐ இல்லை
- ☐ இன்னும் சிறப்பாக செய்திருக்கலாம்.

நீங்கள் அவர்களுக்குச் சொல்ல வேண்டிய தகவல்கள் ஏதேனும் உள்ளதா?

- ☐ ஆம், அவர்களைத் தொடர்புகொள்வதற்கான தகவலைப் பெற்றுக்கொண்டேன்
- ☐ இல்லை. பயணத்தின் போது இதுபோன்ற கேள்விகள் எதுவும் வரவில்லை
- ☐ ஆம், ஆனால், தகவலை எப்படிப் பெறுவது என்று தெரியவில்லை
- ☐ ஆம், ஆனால் நான் கேள்வியை மறந்துவிட்டேன்
- ☐ ஆம், ஆனால், அவர்களைத் தொடர்புகொள்வதற்கான தகவலைப் பெற மறந்துவிட்டேன்

அந்த இடத்தின் பல்லுயிர்ப் பாதுகாப்பு சார்ந்த பிரச்சினைகளை உங்களால் பேச முடிந்ததா?

- ☐ ஆம்
- ☐ இல்லை

நன்னெறிமுறைகளை உங்களால் பின்பற்ற முடிந்ததா? உங்கள் விருந்தினர்களைப் பின்பற்ற வைக்க முடிந்ததா?

- ☐ ஆம், விருந்தினர்கள் நான் பின்பற்றும் கொள்கைகளில் மகிழ்ச்சியடைந்தனர்
- ☐ ஆம், ஆனால் விருந்தினர்கள் வருத்தமடைந்தனர்
- ☐ நெறிமுறை நடத்தையை நான் இன்னும் சிறப்பாகச் சொல்லியிருக்கலாம்.
- ☐ விருந்தினர்கள் என்னுடைய கட்டுப்பாட்டில் இல்லை
- ☐ நான் அவற்றைப் பின்பற்ற முடியவில்லை.

சிறப்பான கவனிப்பு என்று ஏதேனும் ஒரு செயலை உங்களால் செய்ய முடிந்ததா?

- ☐ ஆம். விருந்தினர்கள் மிகவும் மகிழ்ந்தனர்.
- ☐ அதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை
- ☐ நான் இன்னும் சிறப்பாகச் செய்திருக்கலாம்.

இந்த இயற்கை நடையில் நீங்கள் புதிதாகப் பார்த்த / கற்றுக்கொண்ட தகவல்கள் என்ன?

_____

_____

_____

_____



nature
conservation
foundation

‘Amrita’ 1311, 12th A Main,
Vijayanagar 1st Stage, Mysore 570017

